சந்தா
1 வருடம் ரூ. 1-8-0
தபால்செலவுநீங்கலாக

சந்தா
வெளியூர்களுக்கு
1 வருடம் ரூ. 1-12-0

ஸ்ரீ வேங்கட கிருபா.

ஓர் கிராம வெளியீடு

பிரதி மாதந்தோறும் சிரவண நக்ஷத்திரத்தில் வெளிவரும்.

சித்திரபாநு வருஷம் வைகாசி மாதம்.

மலர் 1. இதழ் 2.

விஷய அடக்கம்.

1. ஆசிரியர் குறிப்பு
2. அங்காரகபால்
3. ஸ்ரீ வேங்கடேச விபவ அவதாரம்
4. கிராம வாழ்க்கை
5. யூனியன் சர்க்கார்
6. ஸ்ரீ வேங்கடகிருபா போட்டி நெ. 1
   ,, 2

தனிப்பிரதி 0—2—0

KOVILVENNI P. O. (S. I. RY.)
TANJORE Dt.
2—6—1942.

Dear Sir,

I feel it a pleasure to request you all to be good enough to encourage this Tamil monthly "Sri Venkata Kripa" with full heart, In starting this monthly it is my sincere intention to do fourfold service to villages in the name of "Sri Venkatesa" as under:-

(1) To infuse faith in God.

(2) To infuse faith in His disciples.

(3) Service to village and its inhabitants.

(4) Service to Government by suggesting improvements in village and its constitution.

2. I know my task is a hard one. But in anticipation of hearty co-operation of villagers whose aid is essential in fulfilment of my task of gathering various details, with free gifts and subscriptions which I may receive from the benevolence of you all and with Trust in Sri Venkatesa, I hope to fulfil my task,

3. May it please you therefore to offer a helping hand in fulfilment of my task by contributing free donations; subscriptions and with information re villages.

Thanking you.

Yours Sincerely,

S. SANTHANAGOPALAN

ஸ்ரீ வேங்கட கிருபா.

தாயின் பேரொலி

"பாராயோ என்தன்முகம் பார்த்தொருக்கால் என்கவலை தீராயோ பராபரமே"

என்று கதறுகிறாள்; நம் பாரதத்தாய். பரமபுருஷன் உகந்த மாநிலத்தாய். இதென்னகோலம்! போரரக்கன் நம்வீட்டு வாசற் கதவை தட்டிக்கொண்டேயிருக்கையில் நம் குழந்தைகள் புத்தும் பத்துவிதமாக இருக்கின்றனவே! பேச்சைப் பார்த்தால் தர்மம் தான். ஆனால் நடப்பதோ மாறானவழியில். திரௌபதியின் துகில் உரிவதுபோல்; என்னை மானபங்கம் செய்ய அரக்கன்வந்தும் என்ன அஹிம்ஸை கொள்கை? குரு கள் குடித்தாரென்று சிஷ்யன் கள் குடித்தானாம்; குரு பழுக்கக்காய்ச்சி திரவமயமான இரும்புக் குழம்பை சிறிதுதூரம் அப்பாற்கண்டதும் அதை வாங்கிப் பருகி சிஷ்யனைக் குடிக்கச் சொன்னாராம். சிஷ்யன் விழித்தானும், தான் செய்த பிசகுக்கு குருவின் பாதத்தில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டானும் என்று ஓர் கதை. அதுபோல் அஹிம்சை என்ற தர்மம் சிறந்தது. அதன்படி நடப்பதையே ஆண்டவன் பெரிதும் உகப்பர் என்றால், நம் குழந்தைகள் ஆனைக்கு அர்ரம் என்றால் குதிரைக்கு குர்ரம் என்று வியாக்கியானம் செய்துவிடுகிறது. வாணியோ வஞ்சச்சொல்லுக்கும் இன்சொல்லுக்கும் நான் சமரசமாக இருப்பேன் என்கிறாள். இதென்ன விபரீதம்-ப்ரேமபோ! வேங்கடேசா! அஹிம்சையென்றால் பிறருக்கு ஹிம்சை கொடுக்காதிருத்தல். அந்த ஹிம்சை மூன்றுவிதம் மனதினால் பிறருக்கு ஹிம்சை செய்ய நினைப்பது; வாயால் சொல்வது; தன் சரீரபலத்தால் செய்வது என்று மூன்று என்றீர். நம் குழந்தைகள் அஹிம்ஸைப் போர்வையுடன் வாயால் சண்டை போடுகின்றன மனதாலும் நினைக்கிறது. தன் பலத்தை மட்டும் தங்களுக்குள் காட்டிக் கொள்ளவில்லை. என் துகிலை உரிய போரரக்கன் வந்திருந்தும் வீட்டையும் அதிலுள்ள சொத்துக்களையும் தாங்கள் ஆளவேண்டும் என்கிற எண்ணம் இருக்கிறதேயொழிய; சொத்தை ஆள எண்ணுபவர்; மானத்தைக்காப்பாற்ற அஹிம்ஸை பயன்படாது என்று கிட

புத்திவந்து ஒன்றுசேர்ந்து எதிர்க்காரா? எதாவது ஒரு குழந்தை தன் கையில் இருப்பதை விட்டுக்கொடுத்து சமரசம் செய்து கொண்டு யுத்த அரக்கனை எதிர்த்தழிக்கார்? என்னைப்போன்ற இதர தாய்மார்களாகிய இங்கிலாந்து; அமெரிக்கா எல்லாம் என்ன பாக்கியம் செய்து குழந்தைகளைப் பெற்றனரோ? ஹே ப்ரபோ! பங்காளிச் சண்டையை விட்டு தாய் மானம் காப்பாற்ற இங்கிலாந்தின் குழந்தைகள் ஒற்றுமைப்படவில்லையா? அமெரிக்கத் தாயின் குழந்தைகள் தங்கள் சம்பிரதாயத்தை விட்டுவிட்டு மூன்றாம் முறையாக ரூஸ்வெல்ட் தலைமையின்கீழ், யுத்த அரக்கனை எதிர்க்கவில்லையா? என் விதிவசம் என்செய்வேன்?" என்று கதறுகிறாள் பாரதத்தாய் இடைவிடாது.

ஹே காங்கிரஸ் பிரமுகர்களே! உங்கள் இந்த அஹிம்சைக் கொள்கை நம் இந்தியாவின் உயரிய தர்மம் என்று கூறுவீராயின் நம் இந்தியாவிலும் வெளியிலும் வியாபித்திருக்கும் புத்தமதத்தின் மூலபுருஷராகிய பௌத்தர் இந்த அஹிம்சைக் கொள்கையை செயலில் நடத்த; அரசுரிமையை வகித்தல்: கூடாதகாரியம் என்று அரசுரிமையைத் துறந்து பின்னர் உபதேசிக்கலானார். நீங்கள் இந்தியாவுக்கு சுதந்திர ஆக்ஷி வேண்டுமென்று பாடுபடுவது உங்கள் மனச்சாக்ஷிக்குப் பொதுவாக இருக்கும்பக்ஷத்தில் உங்கள் போன்று மனக்கலக்கம் கொண்ட அர்ச்சுனனுக்கு சண்டை செய்வதே க்ஷத்திரியதர்மம் என்று கூறி சண்டை போடும்படி செய்த கிருஷ்ணபரமாத்மாவின் உபதேசத்தை பின்பற்றுங்கள். இல்லையேல் அரசியல் கொள்கையை கைவிட்டு அஹிம்சையை மனம், வாக்கு, காயம் ஆகிய த்ரிகரண சுத்தியுடன் செய்யுங்கள். தீர்க்க திருஷ்டியுடன் எந்தக் காரியத்தையும் செய்ய வேண்டுமேயொழிய "போலி அஹிம்சை"ப் போர்வையுடன் ஒருவர்மீது ஒருவர் வசை மாரிகள் பொழிவது தகாது.

நம் சென்னைராஜதானி சம்பந்தப்பட்டவரையில், மக்களுக்கு பலவகையில் துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த யுத்தகாலத்தில் பாதுகாப்புப் பொறுப்பு நேர்முகமாக கைக்கு கிட்டாவிட்டாலும்; நாட்டின் மக்களின் அபிவிருத்திக்கான தொழில் திட்டங்களும்; இதரதிட்டங்களும் பல, பல, இருக்கின்றன. இருவனைத்த

புரம் போன்ற பல ஸ்டேட்டுகள் அந்தமாதிரியான அபிவிருத்தியில் ஈடுபட்டிருக்கின்றன. வடநாட்டில் பல தொழில்கள் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. இந்த ராஜதானி சம்மந்தப்பட்டவரையில் அவ்விதமான தொழில்களின் அபிவிருத்தி வெகு குறைவாகவே இருக்கிறது.

சம்பிரதாயத்தை கொண்டாட இதுசமயம் அல்ல. பெடரேஷன் சர்க்காருக்குப் பாடுபடுவதில் மாகாணங்களின் பொது பாதுகாப்புக்கான அம்சங்களை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு விட்டுவிட்டு மாகாணங்களின் உள்நிர்வாகத்துக்கு ஒரு தேசிய சர்க்காரை அமைத்தால் அதன்மூலம் பொதுவிவகாரங்களுக்குப் பாடுபட முடியாது என்று கூறமுடியாது. காங்கிரஸில் 35 வருஷங்களாக அனுபவம் வாய்ந்த ஒருவரை இதர காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள்; (அஹிம்சைக்காக போராடும் புண்ணிய புருஷர்கள்) மூளைக் கொதிப்பினால் இந்தமாதிரியான தீர்மானம் சென்னையில் செய்யப்பட்டதாக பேசியது அவர்களுக்கு பெரும் இழிவையே தரும். சென்னை மாகாணம் போன்ற கஷ்டங்கள் அவர்களுக்கு நேரின் அவர்கள் வேறுவிதமான மனப்போக்கை உடையவர்களாயிருப்பார்கள் என்பதற்கு அவர்கள் பேசியவைகளே நல்ல சான்று. இந்த மாதிரியான கஷ்டகாலத்தில் தலைவர்கள் காலஹரணமன்னியில் ஒருங்கு சேர்ந்து மக்களின் துயரை நீக்குமாறு மிகவும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீ:

ஆகாசத்தந்தி

(நமது விசேஷநிருபர்)

வாஷிங்டன்
18-5-42

அன்பார்ந்த ஐயாவுக்கு,

வந்தனம். ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ்துரை இங்கிலாந்து சென்ற பின்னர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மீட்டிங்கில் நடந்த விவாதத்தைக் கேட்டுவிட்டு சீனாமூலம் நேற்றுதான் இவ்விடம் வந்து சேர்ந்தேன். சீனதேசத்தவர் பொதுவாக நம்மை பரிகசிக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் அஹிம்ஸை தத்துவத்தை உபதேசம் செய்யும் பௌத்த மதத்தினர்களாம். ஆனால் தேசத்தை ஆளவேண்டுமென்றால் அஹிம்சை உதவாதாம் அது பயன்படாது என்று தான், அவர்கள் ஒன்றுபட்டு "வீரசுதந்திரம் வேண்டி நின்றால் பின்னர் வேறொன்று கொள்வாரோ" என்று கோஷித்துக்கொண்டே எதிரிகளை தகர்த்து வருகின்றனராம். என்னைக்கண்டவுடன் அவர்கள் நகைத்து "ஐயா இந்தியப் பெரியாரே எங்குவந்தீர்? வீடுபற்றி எரியும்போது உல்லாசப்பிரயாணமோ?" என்றனர்.

நான் ஒரு விசேஷ நிருபர் என்றும் இந்தியாவைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்று அறிந்துகொள்ளவே வந்திருப்பதாக சொன்னேன். அவர்கள் தங்களுக்கு அதிகமாகப் பேச அவகாசமில்லை என்றும் ஆனால் பொதுவாக சில அம்சங்களைச் சொன்னார்கள், அதைமட்டிலும் எழுதியிருக்கிறேன்; "மகாத்மாகாந்தியடிகள் மகா உத்தமர்; அவதாரபுருஷர் அவருடைய அஹிம்சா கொள்கையும்; சாத்வீக ஒத்துழையாமையும் நல்லதுதான். ஆனால் அதை அனுஷ்டிக்கக்கூடிய சக்தி பாமர ஜனங்களிடையில் இல்லை. அவர் பரமதயாளவாளி; சத்தியம் தவறா உத்தமர். தருமபுத்திரர்போல் உலகத்தில் இருப்பவர் எல்லாம் உண்மையாக தன்னைப் போல் இருப்பவர்கள் என்று எண்ணுபவர். ஆனால் சிறந்த காங்கிரஸ் பிரமுகர்கள் சிலர்; ஒருவாயால் வசைச்சொற்களும், காங்கிரஸ்

பெயரால் எள்ளளவேனும் தியாகஞ் செய்யாது தங்கள் இருகைகளா லும் சுயநலத்திற்கு திரவியம் சம்பாதிப்பவர்களும், சமயம் போன்று "தட்டுவேன்" பார்த்து மாறுகிறவர்களுமிருந்து அதன் பெயரைக்கெடுக்கிறார்கள். "சொல்வது ராமாயணம் இடிப் பது பெருமாள் கோவில்" என்ற பழமொழிபோல் பேச்சு "காந்தி யடிகள்; அஹிம்சை; சாத்வீக ஒத்துழையாமை" க்ரியையில் வசைச்சொல்; சுயநலப்பிரசாரம்; இப்படியெல்லாம் நடக்கிறது உங்கள் ஊரில் ஒற்றுமையில்லை. என்ன பிரயோஜனம்?" என்று பரிகசித்தனர்.

வாஷிங்டன் வந்த பின்னர்; இவ்வூரில் சில பெரிய கனவான் களையும்; காங்கிரஸ் மெம்பர்களையும் சந்தித்தேன் அவர்கள் நம் விஷயத்தில் மிகவும் பரிதாபப்படுகின்றனர். ஒருவர் "ஐயோ பரிதாபம்! என்ன திடம்! என்ன நம்பிக்கை! துளசி ஜலத்தை பூமியில் தெளித்துவிட்டால் உள்ளே அந்நியர் படையெடுக்கார்" என்றார். மற்றொருவர் "ஐக்கிய அமெரிக்காவில் இல்லாத வேற்றுமையா உங்கள் ஊரில்? இங்கிலாந்தில் இல்லாத சகஜீசண்டையா உங்கள் ஊரில்? எதிர்கள் எங்கள் மீது படை யெடுக்கும் போதெல்லாம்; எங்கள் வேற்றுமை அகன்று ஒற்றுமை வளர்கிறது என்று சரித்திரம் கூறவில்லையா? இந்த யுத்தத்தை கவனியுங்கள். நாங்கள் "ஒன்று பட்டால் உண்டால் வாழ்வே" இல்லாவிடில் "அனைவர்க்கும் தாழ்வே" என்று ஒன்றுபட்டு எதிர்க்கிறோம். உங்கள் தலைவர்கள் ஆங்கிலேயரை பழிக்கிறார் களே. அந்தத் தலைவர்கள் உங்கள் ஏழை மக்களுக்கு நேர்ந்திருக் கும் கஷ்டத்தை இந்த சமயத்தில் தீர்க்கசெய்தது என்ன? எத்தனை மீட்டிங்? எத்தனை பிரசாரம்; எதிர்ப்பிரசாரம். பிளவுகளை ஏற் படுத்த இதுவா சமயம்? தேசப்பாதுகாப்பின் அவசியத்தைப் பற் றின பேச்சுவந்தால்; தங்களுடைய பலஹீனத்தை மறைக்க அஹிம்சையையும் சாத்வீக ஒத்துழையாமையையும் பேசி வசைச் சொல் பொருந்திய வாசகங்களையுடைய சில கோழைகள் பிரசார மாகச் செய்கின்றனர், அஹிம்சைக் கொள்கையும்; சாத்வீக ஒத்துழையாமையும் மிகவும் உத்தமமான தர்மம் என்று நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். அது காந்தியடிகள் போன்ற தூய்மையான மனத்தினர் செய்தால் நன்றாக அமையும். ஆனால் "போலீ

'அஹிம்சைப்பிரசாரகர்கள்' இதைப்பின்பற்றின் காட்டிற்கு கேட்டினையும். 'சாத்விக ஒத்துழையாமை' என்ற கத்தியை ஒன்றுமறியாத பாமரமக்களிடம் கொடுக்கப்போகிறார்களாம்." என்றெல்லாம் பரிகசித்தார்.

இன்னுமொருவர், உங்கள் தேசத்தில் சம்பிரதாயம் என்று கூச்சல் போட்டென்ன பிரயோஜனம்? காலத்திற்கு ஏற்ப திட்டம் மாற வேண்டாமா? எங்கள் தேசத்து சட்டத்தில் எவரும் எங்கள் தேசத்திற்கு இரண்டு முறை தான் பிரஸிடெண்ட் ஆக இருக்கலாம். இரண்டாம் முறைக்கு மேல் "மூன்றும் முறையாக தேசத்துக்கு பிரஸிடெண்டாக இருக்கக்கூடாது" என்று கண்டிப்பான சட்டம் ஒன்றிருக்கிறது. இங்குள்ள மாகாணங்களில் பல மதங்களும்; பழக்க வழக்க வித்தியாசச் சச்சரவுகளும் இருந்து வருகின்றன. அப்படி இருந்தும் போது எதிரியை முறியடித்து தேசத்திற்கு வழி காட்ட வேண்டுமென்று நாங்கள் சம்பிரதாயத்தை முதன் முறையாக தகர்த்து மூன்றும் முறையாக ரூஸ்வெல்ட் என்ற உத்தமரை பிரஸிடெண்டாக தேர்ந்தெடுத்தோம். (அவருடைய சரித்திரம் நம் தேசத்திலுள்ள உத்தமர்களுக்கு ஏதேனும் நல்ல வழியைக் காட்டுமென்று தோன்றுகிறபடியால், அதை தீர விசாரித்து சுருக்கமாக அடுத்த தபாலில் தெரிவிக்கிறேன்.)

இங்குள்ள மாகாணங்களிலும் பலமதங்களும் பழக்க வழக்கங்களும் அதன் வித்தியாசத்தால் ஏற்படும் சச்சரவுகளும் இருக்கின்றன. அப்படி இருந்தும் பொது எதிரியை முறியடித்து தேசத்திற்கு வழிகாட்ட நாங்கள் எங்கள் சம்பிரதாயத்தை முதன் முதலாகத் தகர்த்து மூன்றும் முறையாக ரூஸ்வெல்ட் என்ற உத்தமரை பிரஸிடெண்டாக தேர்ந்தெடுத்தோம்." என்றார். இவ்விதமான அபிப்பிராயம் வெளியில் இருந்து வருகிறது. ரூஸ்வெல்ட்டைப்பற்றின சரிதம் என்னவென்பதை கொஞ்சம் அறிந்துகொண்டு. இங்கிலாந்து; ருஷியா; துருக்கி சென்று சீக்கிரம் வந்துவிடுகிறேன். நம் தேசத்தில் விசேஷ மாறுதல ஏற்பட்டால் தெரிவிக்கவும்.

தங்கள் அன்புள்ள,
மனோமயி.

ஸ்ரீ:

ஸ்ரீ வேங்கடேச விபவ அவதாரம்

அத்தியாயம் 3

"ஆதிசேஷன் திருமலையை அடைதல்"

"தனக்கு நிகரில்லா திருமால் பாதம் சாதனமும் பயனு மதே, என்று சொல்வர் பெரியோர் இதை உபதேசிக்க எடுத்ததே ராமகிருஷ்ணாதி அவதாரங்கள். இதைக் கடைப்பிடித்து அனுஷ்டித்து "எனக்கு நிகர்யாவர்"? என்றிருப்பவரே நம் ஆசார்யர்கள். இப்படி இந்த யோனியில் நாம் பிறப்போம்; இதில் பிறக்கக்கூடாது என்று ஒருநிதமான நியதியின்றிக்கே பிறந்து அர்ச்சுனனைத் தேர்த்தட்டிலே தனக்கு எஜமானன் போல் அமரச்செய்து, தான் சாரதியாக அமைந்து: அவனுக்கு ஏற்பட்ட மனக்கலக்கத்தை ஓர் வியாஜமாக வைத்து உண்மையான தர்மத்தை உபதேசிக்க பரமகாருணிகனான ஸ்ரீகிருஷ்ண பகவான் தன் அவதாரகால எல்லை பூர்த்தியானவுடன் த்வாபர யுகாந்தத்தில் ஸ்ரீவைகுண்டத்திற்கு எழுந்தருளினார். பகவான் பூவுலகை விட்டகலவும் கலிபுருஷன் உட்புகுந்தான். உலகம் மாறுபட்டது. தர்மங்கள் மறைந்தன. சாதுக்கள் ஹிம்சிக்கப்பட்டனர். துஷ்டர் மிகுந்தனர். பொதுவாக உலகில் அக்கிரமமே அதிகரித்தது.

இது இவ்வாறிருக்க; சமஸ்தலோகங்களையும் பிரளயமாகிற கஷ்டம் நேரிடும்போது தன் வயிற்றில் அடக்கிவைத்து கஷ்டம் நீங்கினவுடன் வெளியில் உமிழ்ந்து காப்பாற்றும் செயலால் "லோகமாதா" என்ற பெயரும் பூண்ட சர்வேச்வரன், நாம் தர்மங்களை உபதேசித்து நன்மையுடனிருக்கும்படி பூவுலகில் உள்ள ஜீவர்களை செய்துவந்தோமே, அவர்கள் சரிவர நடந்து வருகிறார்களா அல்லது கலிபுருஷனின் வலையில் சிக்கிவிட்டனரா என்று யோசித்தார். பூவுலகில் ஜீவர்கள் கலியின் வன்மையால் தடுமாறி நிற்பதை உணர்ந்தார், மனம் நொந்தார். இனி நாம் இவ்விடம் தாமதிக்கலாகாது. கலியின் வன்மையால் ஜனங்கள் பெரிதும் "நிருபயமிற

படிவர்" என்று நினைத்து தான் பூவுலகில் அவதரித்து கலியுகம் ஆராவும் அர்ச்சாவதாரமாய் அவ்விடம் இருந்து ஜீவர்களை கடைத்தேற்றுவோம் என்று சங்கல்பித்துக்கொண்டார்.

அரசர்கள் வெளிஸ்தலங்களுக்குப் பிரயாணமாகுமுன்; அமைச்சர் முதலானவர்கள் முன்சென்று அரசருக்குகந்த விடுதிகளையும் இராசவுகரியங்களையும் நேர்த்தியாய் அமைத்து வைத்து அரசன் வருங்கால் குதூகலத்துடன் வரவேற்குமாப்போலே தான் பூவுலகிற்குப்போகுமுன்; தனக்குகந்த ஸ்தலத்தை சீர்செய்ய அனுப்புவது போல்; தனக்கு இடைவிடாத கைங்கரியத்தை சதா சர்வகாலமும் செய்பவரும்; தனக்கு இணைபிரியாதவனும், தனக்கு மரவடியாக வேண்டும்போது மாறி தன்திருவடிகளின் சம்பந்தத்தை உடையதுமான, ஆதிசேஷனை அனுப்ப ஒர் வ்யாஜத்தை எண்ணினார். பகவான் உடனே ஆதிசேஷனை அழைத்து "அப்பா, குழந்தாய்; நானும் லெக்ஷ்மியும் ஏகாந்தமாக இருக்க ஆவல் கொண்டிருக்கிறோம்; நீ வாசலில் ஜாக்கிரதையாக இருந்து ஒருவரையும் உள்ளே விடாதிர்" என்று ஆக்ஞாபித்தார். ஆதிசேஷனும் "அப்படியே ஆகுக" என்று விடைபெற்று சென்றனன் ஈசனின் மாயையையார் அறிவார்?

சேவைபுரிய ஆதிசேஷன் வாசலில் நிற்கவும் சிறிது நேரத்திற்குள் வாயுபகவான் ஸ்ரீமந் நாராயணனை தெரிசிக்க ஆவல்கொண்டவராய் அவ்விடம் வந்து சேர்ந்தார். சுத்தசாத்வீககுணம் படைத்த மகானும்; எம்பெருமானின் இச்சையை யறிந்து நடக்கக்கூடியவர்களும்; எப்பொழுதும் எம்பெருமானை தெரிசிக்க அருகர்கள்: என்றெண்ணாது, ஆதிசேஷன் அவரை உள்ளே பிரவேசிக்கக் கூடாது என்று தடுத்தார்.

தடுக்கப்பட்டதும், வாயுபகவான் சிறிது சினங்கொண்டவராய் ஆதிசேஷனைப்பார்த்து பின்வருமாறு சொல்லலானார், "ஹே துராத்மாவே, உனக்கென்ன அகம்? ஆவலுடன் ஸ்ரீமந் நாராயணனைத்தெரிசிக்க வந்த என்னை தடுக்கிறாய், முன்னம் உன்னைப்போல் அகங்கொண்ட ஜயவிஜயர்கள்; சனகாதிகளைத்தடுத்து சாபமடைந்ததை இவ்வளவிசீக்கிரம் மறந்து விட்டாயே" என்றார். இதைக்கேட்ட ஆதிசேஷன் பரிஹாசமாய் சிரித்துக்கொண்டே "ஹே வாயுவே; நீ

என்ன அதிகமாய் வெருட்டுகிறீர். பகவானுக்கு "சென்றால் குடையாம்; இருந்தால் சிம்மாசனமாம் நின்றால் மாவடியாம்; நீள் கடலுள் என்றும் புணையாம்; மணிவிளக்காம் பூம்பட்டாம்; புல்கும் அணையாம் திருமாற்கரவு" என்று போற்றும்படி பகவானின் இச்சையை அறிந்து அவன் என்னை "சேஷா நீ அப்படி செய் இப்படி செய்" என்று உத்திரவிடாமலே நடந்து கொள்பவன் காணும்நான். அவனுக்கு இடைவிடாது தொண்டு புரிவதே என்தொழில் இன்னம் சொல்கிறேன்கேளும் அவனுக்கு மாவடி அல்லது பாதுகைகளாகமாறி அந்தசர்வேச்வரனையே தாங்கும் வலிமையுள்ளவனுக்கும். "எனக்குநிகர் ஆவர்" எவர்? எம்பெருமான் தன்னை யறிந்து நடக்கக்கூடிய எனக்கு நீர் சரிசமமோ? எம்பெருமான் ஏகாந்தமாய் இருக்கும் தருணம் தெரிசனத்துக்கு உகந்ததல்ல என்றுதானே சொன்னேன்? அதில் என்னையா குற்றம். எதற்காக என்னை இழிவு படுத்துகிறீர். நல்லது இந்த நியாயம்" என்றார்.

அதற்கு வாயுபகவான் ஆதிசேஷனை நோக்கி பரிகசித்து சொல்லலானார் "ஓய்! ஆதிசேஷா; அரண்மனையிலிருக்கும் பூனை அரசன் படுக்கையிலும்; போஜனகாலத்திலும் சமமாக இருக்கும் ஆனால் ராஜீய விஷயங்களாகவோ அல்லது இதரவேறு விஷயங்களாகவோ வெளியே செல்லவேண்டுமென்றால்: முதலில் பூனையை கண்ணில் படாத தூரத்திற்கு துரத்திவிட்டு யானையையும்; குதிரையையும் சிங்காரித்து முன்நிறுத்துவார்கள் அதுபோல்தான் காணும் "உம்வேலையும்" என்று உரத்த குரலுடன்கூற இதை செவியுற்ற பிராட்டி எம்பெருமானுக்கு அறிவித்தனள். பகவானும் உடனே வாசற்படிக்கு விரைந்து சென்று ஒன்று மறியாதவர் போல் ஆதிசேஷனை நோக்கி "குழந்தாய், ஆதிசேஷா! இதென்ன பேரிரைச்சல் உங்களுக்குள் கலகம் என்ன" என்று கேட்டார். ஆதிசேஷனும் பகவானிடம் தனக்கும் வாயுவுக்கும் நடந்த வாக்குவாதங்களை சவிஸ்தாரமாய் சொல்லி "ஸ்வாமி, தாங்களே கூற வேண்டும், என்னைவிட பலிஷ்டர் எங்கேனும் உண்டோ ஸ்வாமி" தெரிவிக்கவேண்டும் என்று விக்ஞாபித்துக்கொண்டார். இதைக் கேட்ட பகவான் புன்முறுவல் புரிந்து "ஹே ஆதிசேஷா; வாய்ப் பேச்சால் பலாபலம் தெரியுமோ, செய்கையினின்றே காட்டவேண

டும். உம் பலாபலம் அறிய வேண்டுமென்றால் நீர் ஜம்பூத்வீபம் சென்று அவ்விடத்தில் மேருவின் புத்திரனை ரிஷபகிரி என்று ஒருபர்வதம் இருக்கிறது. அதைஉம்தேகத்தால் சுற்றிக்கொள்ளும் வாயுபகவான் தன் முழுபலத்துடன் அதன்மேல்வீசி அந்தப்பர்வதத்தை தூரஎறிந்து விடுவாராகில் அவரை பலிஷ்டர் என்று கொள்ளும். அவரால் அதுமுடியாவிடில் நீர்தான் பலிஷ்டர் என்று கொள்ளும், அதன்னியில் உம் இருவருக்குமுள்ள பலாபலத்தைக் காண வேறுவழி இல்லை" என்றார்.

ஆதிசேஷனும் வாயுபகவானும் "அதுவே சரி" என்று ஆமோதித்து பகவானிடம் விடைபெற்றுச் சென்றனர் ஆதிசேஷன்ஜம்பூத்வீபத்தை அடைந்து ரிஷபகிரியை தன் உடம்பால் இறுக சுற்றிக்கொண்டார். வாயுபகவானும் தன்னுடைய முழுபலத்துடன் அண்டங்கள் நடுநடுங்க வெகுவேகமாய் அடித்து அந்தக் குன்றை வேரோடு பெயர்த்து, தென்தேசத்தில் சுவர்ணமுகி என்ற நதியின் வடபுறம் சுமார் 4 மயிலில் தள்ளிற்று. பின்னர் மேலும் அதைப் புரட்ட யோசிக்கையில் மேருபர்வதம் புருஷ உருவுடன் பகவானை அணுகி "ஐயா, உமக்கு ஆதிசேஷன் அபராதியே அல்லது என் புத்திரன் அபராதியல்லவே ப்ரபோ! சகல தர்மங்களும் அறிந்த உமக்கு நான் கூறவும் வேண்டுமோ. கிருபைகூர்ந்து மேற்கொண்டு என் புத்திரனை ஹிம்சிக்காதீர்" என்று பிரார்த்தித்தான். வாயுபகவானும் அதற்கு இணங்கினார்.

இதே சமயம் ஆதிசேஷனும், வாயுபகவானால் அவமானமடைந்ததும், தன் அகங்காரம் நீக்கப்பெற்றவனாய் தனக்கு இந்த அவமானம் நேர்ந்ததற்கு காரணம் யாது? என்று தியானித்து தன் ஞானக்கண்ணால்; எம்பெருமானே "ஏகாந்தமாயிருப்போம்" என்ற வியாஜத்தைக்கொண்டு தான் செய்யப்போகும் அவதாரத்திற்கு பூர்வாங்கமாக நம்மை இவ்விடம் அனுப்ப யோசித்ததின் விளைவேயன்றி வேறல்ல; என்றுணர்ந்து வாயுவை சாஷ்டாங்கதெண்டனிட்டு நின்றார். வாயுவும் புன்முறுவல் பூத்து அவரை மன்னித்து "நமக்குள் இனி யாதொரு வைரியுமில்லை" என்று சொல்லி அந்தர்த்தானமாயினார். பகவத்மாயையினால் தனக்கு ஏற்பட்ட இந்த அவமானத்தை பொருட்படுத்தாமல் அகங்காரம் நீங்கப்பெற்றவ

ராய், தான் சுற்றிக்கொண்ட மலையிலேயே அந்தர்த்தானமாகி, அரசன் வருகையை எதிர்நோக்கி ஸ்தலத்தை பரிமளிக்கச்செய்யும் அமைச்சர்போல்; அந்த மலையை மிகவும் சோபையுடன் விளங்கும்படிசெய்ய எண்ணங்கொண்டார். இப்படி ஆதிகாலத்திலிருந்தே எம்பெருமான் உகந்த இந்த மலையானது ஆதிசேஷனை தன்னிடம் அந்தர்த்தானமாகப்பெற்ற அங்காள் முதல் [illegible] பெயர்பெற்று விளங்கலாயிற்று.

அத்தியாயம்—4

சேஷாசலத்தின் சிறப்பு.

லக்ஷ்மீதேவியினால் சதா பூஜிக்கப்பட்டும் [illegible] இடைவிடாது புகழப்பட்டும் ஆதிசேஷனால் பீதியடியாக மாறி அனுபவிக்கப்பட்டும் வருவதான திவ்யமான பிரகாசத்தையுடைய ஸ்ரீமந்நாராயணனுடைய பாதங்களின் சம்பந்தத்தைக்கொண்ட ஆதிசேஷன் அந்தர்த்தானமான மலையானதால், அந்த மலை இவர் அந்தர்த்தானமான அந்தக்ஷணமே மிகவும் சோபையையுடையதாக ஆயிற்று.

பகவானுக்குகந்ததான அகில்; சந்தனம்; தாரு முதலிய விருக்ஷங்களும்; சாதீ, செம்பக, மல்லிகை, முல்லை, ரோஜா; அரளி, புன்னகவிராளி, சாமந்தி, சம்பங்கி, இருவாக்ஷி; பாரிஜாதம், பத்மம், நீலோத்பலம் முதலான பற்பலவிதமான புஷ்பங்களும், துளசி, பில்வம் முதலியன நிறைந்து வல்லிக்கொடிகள் கொடிசம்பங்கி முதலான நானாவித கொடிகள் ஒன்றோடொன்று பிணைந்து ஈதென்ன புஷ்பமண்டபமோ? என்று ஐயுறுமாறு மனதிற்கு மிகவும் ரம்மியமானவாசனையுள்ளதாக இருக்கவும்; பூக்களிலிருக்கும் மகரந்தத்தை உட்கொண்டு ரீங்காரம் செய்யும் தேனீக்களும், ஹம்சம், கோகிலம், குயில், மயில், செம்போத்து, அன்றில், புறா, கிளிகள் முதலான பக்ஷிஜாதிகள் இனிமையாக சப்தித்துக்கொண்டிருக்கவும், குரங்கு, கரடி, சிம்மம், யானை, கஸ்தூரிமிருகம், கவரிமான், கலைமான், செந்நாய், ஓநாய், எருமை, பசு முதலிய மிருகக்கூட்டங்கள் யதேச்சையாக ஒருபுறம் சஞ்சரித்துக்கொண்டு திரியவும், தெள்ளிய நீர் அருவிகள் பல சல சல வென்ற சப்தத்துடன் இடைவிடாது "எம்பெருமான் அவதரிக்கப்போகிறார், வாருங்

கள்; வாருங்கள்" என்று உலகினரை கூப்பிட்டழைப்பதுபோல் பிரவகிக்கவும் சகல தாதுக்களுடன் சம்பூர்ணமாக அந்த மலை விளங்கலாயிற்று. இதைக் கண்ணுற்ற தேவரும்; ரிஷிகளும் நாளுக்கு நாள் இந்த மலைக்கேற்படும் சோபையைக் கண்கூடாகக்கண்டு புளகாங்கிதரானார்கள். பிர்மாவும்! ஆதிசேஷன் தன்னை எம்பெருமான் திருவடி சம்பந்தம் பெற்றதாலன்றோ தன்னை சிருஷ்டியில் தோற்கடிக்கவல்லதான வல்லமையடைந்தான் என்று எண்ணலானார்.

பொதுவாக சேஷாசலத்தைக் கண்ணுற்ற அனைவரும் எம்பெருமானின் அவதாரம் சமீபத்திலிருப்பதாக எண்ணி அந்த மலையில் வாசம்செய்து எம்பெருமானை அநுபவிக்க எண்ணலானார். பூர்வ ஜென்மத்தில் கிருஷ்ணாவதாரகாலத்தில் தந்தையாகவிருந்த வசுதேவர் ஓர் புளியமரமாக ஆகி ஸ்வாமி புஷ்கரணீ என்று சொல்லப்பட்ட புஷ்கரணிக்கு தென்கரையில் எம்பெருமானின் கலியுக விபவ அவதாரத்தை எதிர்நோக்கி நின்றார். மாதாவாகிய தேவகி புற்றாக உருவம் எடுத்து புளியமரத்தினடியில் இருந்தாள். யமுனா நதியானது ஸ்வாமி புஷ்கரணியாக ஆயிற்று. யசோதாபிராட்டி பகுளமாலிகை என்ற பெயருடன் எம்பெருமானுக்கு பணிவிடை செய்ய காத்திருந்தாள். யாதவர் மிருகங்களாகவும்; கோபிகள் நானாவித பக்ஷிகளாக ஆனார்கள். விரஜாநதி சுவர்ணமுகியாக ஆயிற்று. முக்தர்கள் பக்ஷி ரூபங்களாகவும்; மிருகேந்திரர்களாகவுமானார்கள். ஸநத்குமாரர் முதலானவர்கள் வானராதிகளாக ஆனார்கள். இந்தவிதமாக எல்லோரும் எம்பெருமானின் அவதாரத்தை எதிர்நோக்கியிருந்தனர்.

கிராம வாழ்க்கை.

"கிராமம்" என்பதும் "அரசாங்கம்" என்பதும் முதன் முதல் எப்பொழுது ஏற்பட்டது என்பதைப்பற்றி திட்டமாக கூறமுடியவில்லை. சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுக்குள்ளேயே இது விஷயமாக அபிப்பிராயபேதம் தீர்ந்தபாடில்லை. ஆதலால் நாமும் சரித்திர பூர்வமாக ஒன்றும் நிர்ணயிக்க முடியாமல் ஊகத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னால் புராதனமான சமூக, சமுதாய கோட்பாடுகளுடன் ஏரி; ஆறு; குளம்; கால்வாய்; சாலைகள் சமீபமாக இயற்கையாகவுள்ள எல்லைகளுக்குட்பட்டு ஒரு முகமான நோக்கங்களை கொண்ட பல மதத்தினர்; தாங்கள், மழை, வெயில் முதலியவைகளினின்று தங்களையும் தங்கள் சொத்து சுதந்திரங்களையும் காப்பாற்றிக்கொள்வதற்காக வீடுகளைக்கட்டிக்கொண்டு தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் வசித்துவந்தது ஓர் கிராமம் என்பது. இப்படி நம் இந்தியாவில் சுமார் 7 லக்ஷம் கிராமங்களுக்குமேல் இருப்பதாக கூறப்படுகிறது. ஒவ்வொரு கிராமங்களும் ஒரே விதமான பழக்கவழக்கங்களை உடையது என்று கூறமுடியாது என்றாலும்; அந்த கிராமங்களில் வசிப்பவர்; அவரவர் தன்மைக்கும் குணத்துக்கும் ஏற்ற தொழிலைக்கைக்கொண்டனர் என்பது தெளிவு. ஒவ்வொருவருக்கும் விவசாயம் என்கிற பயிர்த்தொழிலே பிரதானமான ஜீவனமாகக்கொண்டனர். கறவைப்பசுக்கள்; ஆடு; கோழி முதலானவைகளையும் அவரவர் மதத்திற்கு அநுகுணமாக தங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள வளர்த்து வந்தனர். உணவுப்பொருள்களைத் தவிர எண்ணைவித்துக்களும்; உளுந்து, பயறு, மிளகாய், மா; பலா; புளி; தென்னை முதலியவைகளும் பயிரிடப்பட்டு வந்தனர்.

கிராமத்தில் வசித்து வந்தவர்; முதலாளிகளும் பண்ணையாட்கள்; கொல்லன், தச்சன்; நாவிதன்; வண்ணான்; வெட்டியான் முதலான தொழிலாளிகளுமே ஆவர். இந்த தொழிலாளிகளுக்கு அவரவர் தொழிலுக்கும் தேவைக்கும் தகுந்தார்போல் மானியம் வழங்கப்பட்டிருந்தது தங்களுக்கு வழங்கப்பெற்றிருந்த மானியத்

ளை பயிர் செய்துகொண்டு தங்கள் தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதற்கு பதிலாக அவரவர்க்கு ஏற்பட்டிருக்கும் பொதுவான மாமூல் வேலைகளைச்செய்ய கடமைப்பட்டவர்கள். இம்மாமூல் வேலைகளைத்தவிர அதிகமாகச் செய்யும் வேலைகளுக்கு ஊதியம் பெற்றுவந்தனர். இவர்களுக்கு பயிர் அறுவடையாகும் காலங்களில் ஒரு அரி அல்லது ஒரு கோட்டு கதிர்பெற உரிமையுண்டு பண்ணைவேலை செய்து வரும் தொழிலாளிகள்; வேலைசெய்யும் நாட்களுக்கு ஏற்பட்ட குறைந்த ஊதியமும்; மானியத்தில் வரும் வரும்படியும்; பயிர்த்தொழிலில் கிடைக்கும் வருமானத்தில் ஓர் வீதத்திற்கும் உரியவனாவான். இதைத்தவிர பண்டிகை காலங்களில் துணியும்; சாவு; வாழ்வுகளில் தன் எஜமானனின் உதவிக்கும் உரியவனுமிருந்தான். இவர்களைத்தவிர வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் நீராணிக்கன் என்றும்; பொதுக்காவல்புரியும் தலையாரி என்றும் அவரவர்க்குரிய மானியங்களையும் ஊதியத்தையும் பெற்று வசித்து வந்தனர். இப்படி கிராமத்தில் வசித்துவந்த ஒவ்வொருவரும் பயிர்த்தொழிலையே பிரதானமாகக்கொண்டு செட்டான முறையில் காலக்ஷேபம் செய்ய வசதிகள் இருந்து வந்ததும் தவிர, ஒவ்வொருவரும் மற்றவர் நலத்தை தன் நலமாகவே கருதி, சாதிமத வித்தியாச வேற்றுமைகள் பாராட்டாது வசித்துவந்தனர்.

கிராம அபிவிருத்தியில் ஒருமுகமாக பாடுபடுதலும்; பஞ்சகாலங்களில் கையிலுள்ளவர்கள் இல்லாதவர்களுக்கு உதவி புரிந்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. அப்படி தங்கள் தேவையை பரிகரிக்க கிராமத்தில் போதுமான பொருள்கள் இல்லாவிடில் அப்போது தங்களிடம் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பொருள்களை வண்டியில் ஏற்றி அயலூருக்கோ அல்லது சமீபத்தில் கூடும் சந்தைகளுக்கோ சென்று தங்கள் பண்டங்களை மாற்றிவந்தனர்.

இனி அவர்களின் அரசியல் அமைப்பைப்பற்றி சிறிது கூறுவோம். இப்படி கிராமத்தில் வசித்து வந்தவர்கள் தங்கள் கட்டுப்பாட்டையும் பத்திரத்தையும் உத்தேசித்து தொழிலாளர்கள் தங்களுக்கு 10 அல்லது 20 ஆடவர்களுக்கு ஒரு நாட்டாண்மைக்காரர் வீதம் அமைத்துக்கொண்டனர். இதையன்றியில் ஊருக்குப் பொதுவில் கண்ணியம் வாய்ந்த பரம்பரைகளில் செல்வந்தராய் உள்ளவர்களில் 5 பேருக்கு குறையாமல் பரம்பரையாக பஞ்சாயத்

தார்கள் இருந்தனர். தொழிலாளிகளுக்குள் ஏற்படும் கொடுக்கல்; வாங்கல், சாவு, கலியாணம் விஷயமான தகராறுகளையும் சில்லறை தெய்வ விழா சம்மந்தமான விவகாரங்களையும் நாட்டாண்மைக் காரர்கள் தீர்த்துவந்தனர். கிராம பஞ்சாயத்துகாரர்களோ ஊரைப் பற்றின பொதுவான வாய்க்கால்வெட்டு; குளம் வெட்டுதல், கோவில்களை பாராமரித்தல் முதலான பொதுவேலைகளை செய்ததும்; பொது சச்சரவுகளையும், நாட்டாண்மைக்காரர்களால் தீர்க்கமுடியாத சச்சரவுகளையும் தீர்த்து வந்தனர். பொதுக்காரியககளை நடத்துவதில் வரிவிதித்துவாங்க இவர்களுக்கு அதிகாரம் இருந்து வந்தது. இவர்கள் பொது வேலைகளை நடத்துவதற்கு தொழிலாளிகளையும்; ஆட்களையும் கூப்பிடவும்; ஒருங்குசேர்க்கவும் வெட்டியான்; தலையாரி; நீராணிக்கன் இவர்களை உபயோகித்து வந்தனர். ஊர் பாதுகாப்பு வேலைகளை தலையாரி கவனித்து வருவான், இந்த வேலையில் சந்தர்ப்பத்திற்கேற்றப்போல் இதர ஊழியர்களும் சேர்வர். நிலத்தின் சொந்தக்காரர்கள் பொதுவாக தன்னை ஆளும் அரசருக்குவரும் வரும்படியில் ஆறில் ஒன்று செலுத்தி வந்தனர்.

இந்தவிதமாக பூர்வீக கிராமங்கள் சிறப்புற்று விளங்கின நாகரீக உலகில் தற்சமயம் காணப்படும் முதலாளி; தொழிலாளர் சச்சரவு; சாதிமத சச்சரவு; நிறபேதத்தினால் ஏற்படும் சச்சரவு இவைகள் மருந்துக்கும் கிடையாது. நம் புராதன கிராமங்களின் அமைப்பை ஆராய்ச்சி செய்வதிலிருந்து உலகிற்கு பல நன்மையைக்கொடுக்கக்கூடிய அம்சங்கள் கிடைக்க ஹேதுவுண்டு. அவைகளில் முதலாளி; தொழிலாளர் ஒற்றுமை. (1) சாதிமதக் கொள்கையில் சுதந்திரம் (2) பொதுக்காரியங்களில் ஒற்றுமை (3) பரஸ்பரம் கஷ்டகாலங்களில் உதவும் குணம் (4) இவை போன்றது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு:—இதில் எழுதப்பட்டிருக்கும் கிராமத்தின் அமைப்பானது ஒரே மாதிரியாக எங்கும் இருக்கமுடியாது எனினும் பெரும்பாலான அமைப்பைப்பற்றியே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எப்படியிருப்பினும் ஆசிரியர் ஒவ்வொரு கிராமங்களின் அமைப்பைப்பற்றியும் பொதுஜனங்களின் உதவியைக்கொண்டு எழுதவெண்ணியிருப்பதால் அந்த சமயம் மாறுதல்கள் குறிப்பிடப்படும்.

யூனியன் சர்க்கார்

ஐக்கிய அமெரிக்கா (Federal union) பிரபல ஆசிரியர் B. E. Hamnond எழுதியதை அநுசரித்து எழுதப்பட்டது

(Federal union) பெடரல் யூனியன் சர்க்கார் என்று ஒன்றுண்டு. இந்த பெடரல் யூனியன் சர்க்கார் என்பதில், பலமாகாணங்கள் பொது பாதுகாப்பு சம்மந்தமாக ஒன்றொடொன்று தாங்கள் ஒன்றுசேவதற்கான உடன்படிக்கைகள் மூலம் ஓர் மத்திய சர்க்காரை அமைக்கும். ஆனால் மாகாணங்களின் உள் ஆட்சி முறைகளில் சுதந்திரம் பெற்றிருக்கும். இது நாம் அறிவதற்கு இந்த பெடரல் யூனியன் சர்க்கார் அமைப்புகளைக்கொண்ட அரசாங்கங்களைப்பற்றிய விஷயங்களை சிறிது அறியவேண்டியது அவசியம். அவைகளில்முதன் முதலாக அமெரிக்கன் காமன்வெல்த் (American cammonwealth) என்று புகழப்படும் ஐக்கிய அமெரிக்காவைப் பற்றி சிறிது கவனிப்போம்.

ஐக்கிய ஏற்படுவதற்கான காரணங்களும், அமைப்பும் (1)

"கனிபழுத்தால் சட்டுவிடும்" என்பது ஓர் பழமொழி. அதுபோல் தனக்கு தாய்நாட்டிஉள்ள தொடர்பை ரத்து செய்து தனித்து நின்ற குடியேற்றநாடு ஐக்கிய அமெரிக்கா.

(2) இதில் முதன் முதலாக பிரிட்டிஷார் குடியேறியது 17-வது நூற்றாண்டில். அதுவும் அப்பொழுது ஆண்டுவந்த அரசர்கள் சகோதரத்வத்தையே போதிப்பதாக மிகவும் தற்புகழ்ச்சி செய்து கொள்ளும் கிருஸ்துவமதத்தை அநுஷ்டித்துவரும் தன் பிரஜைகளில்; அந்த கிருஸ்துவமதத்திலேயே ஆங்கிலிகன் சர்ச்கொள்கைப் படி அநுசரித்து நடக்காத இதர வகுப்பினரை மிகவும் கொடுமைக்கு உள்ளாக்கினர். அந்த மதக்கொடுமைகளுக்கு அஞ்சின சிலபியூரிட்டன் வகுப்பினர் கிபி 1620-ம் வருஷத்தில் ஒருகப்பலில் அமெரிக்காசென்று அதன்கீழ் கடற்கரையோரமாக குடியேறினர். இவர்களுடன் இதுபோன்று மதக்கொடுமைகளுக்கு ஆளான கத்தோலிக்கர்களும் குடியேறலானர்கள். நாளடைவில் இருவகுப்பினரும் (பியூரிட்டன் வகுப்பினரும், கத்தோலிக்க வகுப்பினரும்) ஒன்றுசேர்ந்து மதசுதந்திரத்துடன் வாழ்ந்து வந்ததுமன்னியில்

அவ்விடம் தங்களுக்கு பின்னல் வருபவர்களுக்கும் அந்த சுதந்திரத்தை அளித்து வாழலானார்கள். இந்த காலனிகள் 18-வது நூற்றாண்டு ஆரம்பத்தில் 13-ஆக ஆகியது. இவ்வாறு தங்கள் காலனிகள் சிறப்புற்று விளங்க ஆரம்பித்தவுடன் தாய் நாடு தனக்குரிய தாயின் உரிமையை கொண்டாட ஆரம்பித்தது. இவைகளும் தங்கள் ஒற்றுமையையும் பொது பந்தோபஸ்தையும் முன்னிட்டு இணைந்தன. ஒவ்வொரு மாகாணமும் ஒரு ஜனநாயக சபையுடனும் இங்கிலாந்திலிருந்து நியமிக்கப்படும் கவர்னரால் ஆளப்பட்டுவந்தது. இந்த 13-காலனிகளுக்கு மேற்குப்புறத்தில் லூசியானா என்ற பெயருடன் விளங்கிவந்த பிரெஞ்சுக்காலனிகள் தங்கள் பிரெஞ்சு அரசாங்கத்தின் ஆட்சிமுறையில் ஆளப்பட்டு வந்தது. வடக்கே கனடாவும் பிரெஞ்சுக்காரர்கள் வசம் இருந்து வந்தது.

1664-ல் டச்சுக்காரர்களுடன் நடந்த போரில் "நியூயார்க்"கையும்; பிரெஞ்சுக்காரர்களுடன் நடந்த போரின் இறுதியில் 1763-ல் ஏற்பட்ட ஒப்பந்தப்படி கனடாவையும் மிஸ்ஸிஸிபி என்னும் நதிக்கு கீழ்புறம் உள்ள ஸ்தலங்களையும் பிரிட்டன் அடைந்தது. ஆனல் இந்த சண்டைகளின் காரணமாக இங்கிலாந்துக்கு கடன்பளு அதிகமாயிற்று. இங்கிலாந்திலுள்ள பிரமுகர்கள் இந்த செலவு பூராவும் அமெரிக்க காலனிகள் ஏற்கவேண்டும் என்று ஸ்டாம்பு ஆக்ட் என்னும் ஒரு சட்டத்தை 1765ல் செய்தனர். அமெரிக்கர்கள்; தங்களால் பிரதிநிதிகள் அனுப்பிக்கப்படாத பார்லிமெண்டில் செய்யப்பட்ட சட்டமென்று அதை ஆக்ஷேபிக்க அதை பிரிட்டிஷார் வாபீஸ் பெற்றுக்கொண்டனர். ஆனல் அந்தவரி வேறு ஸ்வரூபமடைந்தது, அது என்னவென்றல் அமெரிக்காவுக்குள் இறக்குமதி ஆகும் டீ சரக்கின்பேரில் ஓர்வரி விதிக்கப்பட்டது. முதன் முதலாக இவ்விதம் வரி விதிக்கப்பட்ட 3 கப்பல்கள் டீ "மஸாசூஸெட்ஸ்" என்ற மாகாணத்தைச்சேர்ந்த பாஸ்டன் துறைமுகம் வந்துசேர்ந்ததும் அமெரிக்கர். ஆத்திரமடைந்து இந்தியர்போல் மாறுவேடம்பூண்டு கப்பல்மீது ஏறி டீ சரக்குகளை சமுத்திரத்தில் எறிந்தனர். இதன் காரணமாக யுத்தம் துடங்கியது; முதன் முதலில் பிரிட்டிஷார் மஸாசூஸெட்ஸ் என்ற மாகாணத்தின் சுதந்திரத்தை ரத்து செய்து விட்டதாக அறிவித்தனர். ஆனல் இதர ஸ்டேட்டுகள் ஒன்று சேர்ந்து வாஷிங்டன் என்பவர் தலைமையில் தாய் நாட்டுடன் யுத்தம் செய்ய ஆரம்பித்தது.

1776ம் வருஷத்தில் 13 குடியேற்ற மாகாணங்களும் தங்கள் பிரதிநிதிகளைக்கொண்டே ஓர் மகாசபையைக்கூட்டி இங்கிலாந்தின் தொடர்பு அன்னியில் பிரிந்து தாங்கள் சுதந்திரமாக வாழ தீர்மானித்ததுவும் தவிர, தங்களுடைய பொதுவான பாதுகாப்பை முன்னிட்டு ஒரு மத்தியசர்க்கார் அமைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. 1781ம் வருஷத்தில்தான் இந்த 13 மாகாணங்களும் முதன் முதலாக ஒரு பொதுவான சர்க்காரை மத்தியில் அமைத்தது. அந்த சர்க்காருக்கு காங்கிரஸ் என்று கூறப்படும் ஒரே ஒரு சபைதான் அமைக்கப்பட்டது. அந்த சபைக்கு ஒவ்வொரு மாகாணமும் 2 முதல் 7 வரை பிரதிநிதிகளை அனுப்பி வந்தன. ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு ஓட்டுதான் அளிக்க இயலும் இந்தப் பிரதிநிதிகள் கொண்டசபை சமாதான விஷயமாகவும் யுத்த விஷயமாகவும் முடிவு செய்யும். உடன்படிக்கைகள் செய்வதில் அவைகளுக்கு ஏகதேச உரிமையுண்டு. கடற்படை, நிலப்படைகளுக்கு தளகர்த்தர்களை 13 க்கு 9 பேர் சாதகமாக இருந்தால் நியமிக்க அதிகாரமுண்டு. ஆனால் சைனியங்கள் சேர்க்கவேண்டுமென்றால் இந்த சபை ஒவ்வொரு மாகாண சர்க்காரையும் அவைகளுக்குள்ள விகிதாசாரப்படி சிப்பாய்களையும் ஆபீஸர்களையும் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளவே முடியும். சிப்பாய்கள் வகையறாவுக்கான செலவுகளை சம்பந்தப்பட்ட மாகாணங்கள் ஒரு பொது கஜானாவுக்கு குறிப்பிட்ட காலவரையில் அனுப்ப சபை அனுமதி கொடுக்கலாம் ஆனால் ஜனங்களின்மீது வரிவிதிக்கக்கூடாது என்றிருக்கது. இந்த மாதிரியான சர்க்கார் சரிவர நடக்கவில்லை. மேலும் எதிரிகளின் தாக்குதல்களையும் ஆலோசித்து 1787ல் ஒரு பொதுவான ஸ்திரமான மத்திய சர்க்காரை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை தயாரித்தனர். இந்த திட்டமானது 1789ல் அநுஷ்டானத்திற்கு கொண்டுவரப்பட்டது. அதன்படி உடன்படிக்கைகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட யூனியன் சர்க்காருக்கு (Federal Government) யூனியனை நடத்துவதற்காகவேண்டிய ஏற்பாடுகளும் பொது பாதுகாப்புக்கான அதிகாரங்களும் அளிக்கப்பட்டது. அந்த அதிகாரம் பின்வருமாறு. (1) பொது பாதுகாப்பு சம்பந்தமானவை. யுத்தம் கொடுத்தல்; சைன்யங்களை சேர்த்தல்; கட்டுப்படுத்தல்; திருட்டுக்குற்றங்கள் இன்னின்னவை என்று விவரித்து தண்டித்தல்; கலகங்களை அடக்குதல்;

[தொடரும்]

சென்ற இதழில் சேர்ந்த பிழைகளை உத்தேசித்து
இரண்டாம் முறையாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ வேங்கடேச கிருபா போட்டி

நிர். 1

முடிவு தேதி 30-6-42

1 வே	ங்	2 க	ட	3 வ	ன்		4
ய்						8	
	5 வா		6		7		
9	த்						10
	தி		11				
12 ல	ய			13			
	ம்		14				
		15				16	

அனுப்புகிறவர் விலாசம்

பெயர் ______________________

கிராமம் ______________________

போஸ்டு ______________________

ஜில்லா ______________________

குறிப்பு:—விடைகள் "ஸ்ரீ வேங்கடேச கிருபா" போட்டி ஆசிரியர் கோவில்வெண்ணி போஸ்டு, தஞ்சாவூர் ஜில்லா என்று அனுப்பப்படவேண்டும்.

ஸ்ரீ வேங்கடேச கிருபா போட்டி நீர் 1.

குறிப்பு

இடமிருந்து வலம்

1 திருப்பதியில் வாழும் பிரான்
5 இது முட்டையிடும்
7 ருசி
8 சேர்த்து வைத்தல்
9 கிராமத்திற்கு இது அளிக்க அரசாங்கம் வெகுவாக முயல வேண்டும்
11 இது குடித்தல்: சிதறுண்டிருக்கிறது
12 பிரளயகாலத்தில் சகல ஜீவராசிகளும் விஷ்ணுவிடம் இது ஆகிறது என்றசொல்வார்கள்
13 புளி
14 இது சிவனுக்குகந்தது
15 தலைவன்
16 சபை

மேலிருந்து கீழ்

1 மூங்கில்
2 ஒருவியாசம் அல்லது கதையைப்படித்தால் அதன் இது என்ன என்பதை அறிவது முக்கியம்
3 இதுஒரு ஆபரணம்
4 சக்கிரம்
6 தூக்கம்
8 புண்ணியக்ஷேத்திரங்களில் இஷ்டபூர்த்தியை உத்தேசித்து இது செய்வோருண்டு
9 பஞ்சகாலத்தில் இதுவும் சிலருக்கு உணவு ஆகும்
10 கள்
14 கடவுளை இதுசெய்தல் வேண்டும்.

1 கூப்பனில் காண்பிக்கப்பட்டிருக்கும் இடத்திலிருந்து ஒரு வார்த்தை மேலிருந்து கீழ் நோக்கியோ அல்லது இடமிருந்து வலமாகவோ ஆரம்பமாகிறது. உதாரணம் 1 என்ற லக்கத்திற்கு இடமிருந்து வலத்துக்குள்ள குறிப்பிற்கு "வேங்கடவன்" என்றும் மேலிருந்து கீழ் குறிப்புக்கு "வேய்" என்றும் வார்த்தை வருகிறது. இதுபோல் காணப்படும் குறிப்புகளுக்கு தகுந்தார்போல் வார்த்தைகள் கண்டுபிடிக்கப்படவேண்டும்.

2 ஆசிரியர் விடைக்கு சரியாக உள்ள விடைக்கு பிரைஸ் கொடுக்கப்படும்.

3 பிரைஸ் தொகையானது மொத்தம் வசூலாகும் தொகைக்கு 100க்கு 25 வீதம் செலவுகளுக்கு; ஆசிரியர் உசிதம் போல் பொது நன்மைக்கான விஷயங்களுக்கும் ஒதுக்கப்பட்டு மீதி தொகையில் 3-ல் 2-பாகம் முதல் பிரைஸாகவும் 1-பாகம் 2வது பிரைஸாகவும் வழங்கப்படும்.

4 ஒவ்வொரு பிரைஸும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்குக் வீதாசாரப்படி கொடுக்கப்படும்.

5 இந்தப் போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் ஒவ்வொரு விடையுள்ள முதல் கூபனுக்கு எட்டணாவும் மேற்கொண்ட கூபன்களுக்கு நாலணாவும் மணியார்டர் மூலமாக அனுப்பி விடை கூபனும் ரசீதும் குறிப்பிட்ட தேதிக்குள் போட்டி ஆசிரியருக்கு கிடைக்கும்படி அனுப்பப்படவேண்டும். தாமதித்து வரும் கூபன்களுக்கும் தபாலில் நேரும் தவறுதல்களுக்கும் ஆசிரியர் கட்டுப்பட்டவரல்ல.

சென்ற இதழில் சேர்ந்த பிழைகளை உத்தேசித்து
இரண்டாம் முறையாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ வேங்கடேச கிருபா போட்டி

நீர். 1

முடிவு தேதி 30-6-42

1 வே	ங்	2 க	ட	3 வ	ன்	■	4
ய்	■		■		■	8	
■	5 வா		6	■	7		■
9	த்				■	■	10
	தி	■	11				
12 ல	ய		■	13		■	
	ம்	■	14			■	■
	■	15		■	■	16	

அனுப்புகிறவர் விலாசம்

பெயர் ______________________

கிராமம் ______________________

போஸ்டு ______________________

ஜில்லா ______________________

குறிப்பு:—விடைகள் "ஸ்ரீ வேங்கடேச கிருபா" போட்டி ஆசிரியர் கோவில்வெண்ணி போஸ்டு, தஞ்சாவூர் ஜில்லா என்று அனுப்பப்படவேண்டும்.

ஸ்ரீ வேங்கடேச கிருபா போட்டி நீர் 1.

குறிப்பு

இடமிருந்து வலம்

1 திருப்பதியில் வாழும் பிரான்
5 இது முட்டையிடும்
7 ருசி
8 சேர்த்து வைத்தல்
9 கிராமத்திற்கு இதுஅளிக்க அரசாங்கம் வெகுவாக முயல வேண்டும்
11 இது குடித்தல் : சிதமுண்டிருக்கிறது
12 பிரளயகாலத்தில் சகல ஜீவராசிகளும் விஷ்ணுவிடம் இது ஆகிறது என்றுசொல்வார்கள்
13 புளி
14 இது சிவனுக்குகந்தது
15 தலைவன்
16 சபை

மேலிருந்து கீழ்

1 மூங்கில்
2 ஒருவியாசம் அல்லது கதையைப்படித்தால் அதன் இது என்ன என்பதை அறிவது முக்கியம்
3 இதுஒரு ஆபரணம்
4 சக்கிரம்
6 தூக்கம்
8 புண்ணியக்ஷேத்திரங்களில் இஷ்டபூர்த்தியை உத்தேசித்து இது செய்வோருண்டு
9 பஞ்சகாலத்தில் இதுவும் சிலருக்கு உணவு ஆகும்
10 கள்
14 கடவுளை இதுசெய்தல் வேண்டும்.

1 கூப்பனில் காண்பிக்கப்பட்டிருக்கும் இடத்திலிருந்து ஒரு வார்த்தை மேலிருந்து கீழ் நோக்கியோ அல்லது இடமிருந்து வலமாகவோ ஆரம்பமாகிறது. உதாரணம் 1 என்ற லக்கத்திற்கு இடமிருந்து வலத்துக்குள்ள குறிப்பிற்கு "வேங்கடவன்" என்றும் மேலிருந்து கீழ் குறிப்புக்கு "வேய்" என்றும் வார்த்தை வருகிறது, இதுபோல் காணப்படும் குறிப்புகளுக்கு தகுந்தார்போல் வார்த்தைகள் கண்டுபிடிக்கப்படவேண்டும்.

2 ஆசிரியர் விடைக்கு சரியாக உள்ள விடைக்கு பிரைஸ் கொடுக்கப்படும்.

3 பிரைஸ் தொகையானது மொத்தம் வசூலாகும் தொகைக்கு 100க்கு 25 வீதம் செலவுகளுக்கு; ஆசிரியர் உசிதம் போல் பொது நன்மைக்கான விஷயங்களுக்கும் ஒதுக்கப்பட்டு மீதி தொகையில் 3-ல் 2-பாகம் முதல் பிரைஸாகவும் 1-பாகம் 2வது பிரைஸாகவும் வழங்கப்படும்.

4 ஒவ்வொரு பிரைஸும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்குக் விதாசாரப்படி கொடுக்கப்படும்.

5 இந்தப் போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் ஒவ்வொரு விடையுள்ள முதல் கூபனுக்கு எட்டணாவும் மேற்கொண்ட கூபன்களுக்கு நாலணாவும் மணியார்டர் மூலமாக அனுப்பி விடை கூபனும் ஏசிதுப் குறிப்பிட்ட தேதிக்குள் போட்டி ஆசிரியருக்கு கிடைக்கும்படி அனுப்பப்படவேண்டும். தாமதித்து வரும் கூபன்களுக்கும் தபாலில் சேரும் தவறுதல்களுக்கும் ஆசிரியர் கட்டுப்பட்டவரல்ல.

ஸ்ரீ வேங்கடேச கிருபா போட்டி

நீர். 2

முடிவு தேதி 27—7—42

1 ஆ	சா	ரி	2 ய	ன்	■	3	4
று	■	5 கா			■	6	
■	■	■	7			■	■
8					■	■	13
	■	■		■	12	■	
9 தி		11	■	14	ரு	■	
	■		■	■		■	
10		வை		■	■	■	

அனுப்புகிறவர் விலாசம்

பெயர் ______________________

கிராமம் ______________________

போஸ்டு ______________________

ஜில்லா ______________________

குறிப்பு:—விடைகள் "ஸ்ரீ வேங்கடேச கிருபா" போட்டி ஆசிரியர், கோவில்வெண்ணி போஸ்டு, தஞ்சாவூர் ஜில்லா என்றனுப்பப்படவேண்டும்.

ஸ்ரீ வேங்கடேச கிருபா போட்டி நீர் 2.

குறிப்பு

இடம் வலம்

1 கடவுளைக்காட்டிக் கொடுப்பவன் இவன்.

3 இவனைக்கண்டால் தாமரை மலரும்.

5 சூர்ய னு டை ய......தை பொறுக்க முடியவில்லை என்பதுண்டு.

6 விஷ்ணுவுக்கும்... இந்தப் பெயருண்டு.

7 ...இது உறுதி.

8 நக்ஷத்திரங்களில் ஒன்று.

9 முறுக்கு.

10 "பூமி" உருவழிந்து கிடக்கிறது.

14 இதற்கு பிறப்பு என்னும் பொருள்.

மேலிருந்துகீழ்

1 இது அடிசுடும் அக்காளும் ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்.

2 நாளாக ஆக இது தேயும்.

4 சிவன் என்பது இதன் பொருள்.

8 சிறுவலைக்குப் பெயர்.

11 வாய்குறுகின பாண்டம்

12 சிலர் நாயை குழந்தைபோல ...உடன் வளர்க்கின்றனர்.

13 சந்திரனைக்கண்டால் மலரும்

1 கூபனில் காண்பிக்கப்பட்டிருக்கும் இடத்திலிருந்து ஒரு வார்த்தை மேலிருந்து கீழ் நோக்கியோ அல்லது இடமிருந்து வலமாகவோ ஆரம்பமாகிறது. உதாரணம் 1 என்ற லக்கினத்திற்கு இடமிருந்து வலத்துக்குள்ள குறிப்பிற்கு ஆசாரியன் என்றும் மேலிருந்து கீழ் குறிப்புக்கு "ஆறு" என்றும் வார்த்தை வருகிறது. இதுபோல் காணப்படும் குறிப்புகளுக்கு தகுந்தார்போல் வார்த்தைகள் கண்டு பிடிக்கப் படவேண்டும்.

2 ஆசிரியர் விடைக்கு சரியாக உள்ள விடைக்கு பிரைஸ் கொடுக்கப்படும்.

3 பிரைஸ் தொகையானது மொத்தம் வசூலாகும் தொகைக்கு 100-க்கு 25-வீதம் செலவுகளுக்கு; ஆசிரியர் உசிதம் போல் பொது நன்மைக்கான விஷயங்களுக்கும் ஒதுக்கப்பட்டு மீதி தொகையில் 3-ல் 2-பாகம் முதல் பிரைசாகவும் 1-பாகம் 2-வது பிரைஸாகவும் வழங்கப்படும்.

4 ஒவ்வொரு பிரைஸும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்குக்கிடைத்தால் விதாசாரப்படி கொடுக்கப்படும்.

5 இந்தப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் ஒவ்வொரு விடையுள்ள முதல் கூபனுக்கு எட்டணாவும் மேற்கொண்ட கூபன்களுக்கு நாலணாவும் மணியார்டர் மூலமாக அனுப்பி விடை கூபனும் ரசீதும் குறிப்பிட்ட தேதிக்குள் போட்டி ஆசிரியருக்கு கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். தாமதித்து வரும் கூபன்களுக்கும் தபாலில் நேரும் தவறுதல்களுக்கும் ஆசிரியர் கட்டுப் பட்டவரல்ல.

ஸ்ரீ வேங்கடேச கிருபா போட்டி

நீர். 2

முடிவு தேதி 27—7—42



அனுப்புகிறவர் விலாசம்

பெயர் ____________________

கிராமம் ____________________

போஸ்டு ____________________

ஜில்லா ____________________

குறிப்பு:—விடைகள் "ஸ்ரீ வேங்கடேச கிருபா" போட்டி ஆசிரியர், கோவில்வெண்ணி போஸ்டு, தஞ்சாவூர் ஜில்லா என்றனுப்பப்படவேண்டும்.

ஸ்ரீ வேங்கடேச கிருபா போட்டி நீர் 2.

குறிப்பு

இடம் வலம்

1 கடவுளைக்காட்டிக் கொடுப்பவன் இவன்.
3 இவனைக்கண்டால் தாமரை மலரும்.
5 சூர்யனுடைய......தை பொறுக்க முடியவில்லை என்பதுண்டு.
6 விஷ்ணுவுக்கும்... இந்தப் பெயருண்டு.
7 ...இது உறுதி.
8 நக்ஷத்திரங்களில் ஒன்று.
9 முறுக்கு.
10 "பூமி" உருவழிந்து கிடக்கிறது.
14 இதற்கு பிறப்பு என்னும் பொருள்.

மேலிருந்துகீழ்

1 இது அடிசடும் அங்காளும் ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்.
2 நாளாக ஆக இது தேயும்.
4 சிவன் என்பது இதன் பொருள்.
8 சிறுவலைக்குப் பெயர்.
11 வாய்குறுகின பாண்டம்
12 சிலர் கா[illegible]போல்
[illegible]
1[illegible] [illegible]க்கண்டால் [illegible]

1 கூபனில் காண்பிக்கப்பட்டிருக்[illegible] ஒரு வார்த்தை மேலிருந்து கீழ் நோக்கியோ அல்லது இடமிருந்து வலமாகவோ ஆரம்பமாகிறது. உதாரணம் 1 என்ற லக்கினத்திற்கு இடமிருந்து வலத்துக்குள்ள குறிப்பிற்கு ஆசாரியன் என்றும் மேலிருந்து கீழ் குறிப்புக்கு "ஆறு" என்றும் வார்த்தை வருகிறது, இதுபோல் காணப்படும் குறிப்புகளுக்கு தகுந்தார்போல் வார்த்தைகள் கண்டு பிடிக்கப் படவேண்டும்.

2 ஆசிரியர் விடைக்கு சரியாக உள்ள விடைக்கு பிரைஸ் கொடுக்கப்படும்.

3 பிரைஸ் தொகையானது மொத்தம் வசூலாகும் தொகைக்கு 100-க்கு 25-வீதம் செலவுகளுக்கு; ஆசிரியர் உசிதம் போல் பொது நன்மைக்கான விஷயங்களுக்கும் ஒதுக்கப்பட்டு மீதி தொகையில் 3-ல் 2-பாகம் முதல் பிரைசாகவும் 1-பாகம் 2-வது பிரைஸாகவும் வழங்கப்படும்.

4 ஒவ்வொரு பிரைஸும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்குக்கிடைத்தால் விதாசாரப்படி கொடுக்கப்படும்.

5 இந்தப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் ஒவ்வொரு விடையுள்ள முதல் கூபனுக்கு எட்டணாவும் மேற்கொண்ட கூபன்களுக்கு நான்கணாவும் மணியார்டர் மூலமாக அனுப்பி விடை கூபனும் ரசீதும் குறிப்பிட்ட தேதிக்குள் போட்டி ஆசிரியருக்கு கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். தாமதித்து வரும் கூபன் களுக்கும் தபாலில் நேரும் தவறுதல்களுக்கும் ஆசிரியர் கட்டுப் பட்டவரல்ல.

இரும்/மாயா விநோத மார்வாடி நாவல் இ

ஸ்ரீமான் வடுவூர் K. துரைசாமி அய்யங்கார் B.A.,
அவர்கள்

காங்கிரஸ் கமலம்

அல்லது

ஆணொன்று அகோரமாய் அகப்பட்ட
பெண் புதையல்

என்னும் அதியற்புத நா
ருசிக்கத் தெவிட்டாத இனிய ந
கற்பனா சக்தியால் அதியற்புத
யிருக்கிறார். 10 படத்துடன் வி
குறிப்பு— ரூபாய் 2-8-0 யும் முன்
டர் செய்பவர்க்கு மாத்திரம்
ரிஜிஸ்டர் தபாலில் இனாம் த
பப்படும்.

கிடைக்குமிடம்—
ஸ்ரீ வாணி விலாசம் பிரஸ், திருப்

x

...gh your excellen...
...In its own way and i...
...ough right channels, it

x x x x x

I believe you are going to follow the book up.

(Sd) S. PARTHASARATHY.

No 2. Mylapore,
26—11—41

Dear Santhanam,

I duly received the manuscript sent last week. I took sometime to read it.

x x x x x

Anyway let me congratulate you on this new venture of yours. I have nothing but appreciation for the manner in which you have done it; it is written in good colloquial language, as can be understood by the ordinary reader; and I am quite sure that with the grace of Lord Srinivasan it will in due time find a good market and a widespread sale.

(Sd) G. Rangacha

Edited & Published by S. Santhanagopalan and Printed at
Sri Vani Vilasam Press, Tirupapuliyur.